# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## 2024 ஆம் ஆண்டு மே மாதம் 03 ஆம் திகதிய
## பகுதி II இற்குக் குறைநிரப்பி

(2024.05.08 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)

## பாராளுமன்றத் தேர்தல்கள்
## (திருத்தம்)

(தனியார் உறுப்பினர்களின் சட்டமூலம்)

**1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷனி பர்ணாந்துபுள்ளே அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

## பாராளுமன்றத் தேர்தல்கள்
## (திருத்தம்)

### 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்*

**1.** இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின்                ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**2.** (இதனகத்துப்பின்னர், “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2009 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்ட 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின், 4(ஈ) இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுவதன் மூலம் மேலும் திருத்தப்படுகின்றது: -

> “(ஈ) அரசியல் கட்சிகளிலும் அரசியலிலும் பெண்களின் சிறந்த பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வதற்காக, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி ஒவ்வொன்றும் அக்கட்சியின் பதவிதாங்குநர்களின் பட்டியலில் தீர்மானமெடுக்கும் மட்டத்தில் முப்பது சதவீதத்திற்குக் குறையாத பெண் பதவிதாங்குநர்களின் பிரதிநிதித்துவம் உட்படுத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.”.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.